

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 13-11-2024

# நல்லாட்சியல்ல, பொய்யாட்சி 2

சேலம் மாவட்டத்துக்கு பழனிசாமி கொடுத்த வாக்குறுதிகள் என்ன?

**சேலம் - பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் தி.மு.க. ஆட்சி காலத்தில் தொடங்கப்பட்ட தகவல் தொழில் நுட்பப் பூங்கா பணிகளை முடக்கி வைத்திருந் தார். திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை முடக்கினார். பாதாளச் சாக்கடை திட்டத்தை முறையாகச் செயல்படுத்தவில்லை. ஏற்காடு தாவரவியல் பூங்காவை முறையாக அமைக்கவில்லை. சேலம் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையை மேம்படுத்தவில்லை. சேலம் மாநகர எல்லைப் பகுதிகளை இணைக்கும் ரிங் ரோடு அமைக்கப்படும் என்றார் பழனிசாமி. அமைக்கவில்லை. தலைவாசல் சந்தை விரிவாக்கம் செய்யப்படவில்லை. ஓமலூரில் திரவிய தொழிற்சாலை அமையவில்லை. எடப்பாடி, வீரபாண்டி தொகுதியில் ஜவுளி பூங்கா அமைய வில்லை. சேலத்தில் ராணுவத் தளவாடத் தொழிற்சாலை அமையப் போகிறது என்றார்கள். அமையவில்லை. சேலம் செவ்வாய்ப்பேட்டை லாரி மார்க்கெட் மேம் படுத்தப்படவில்லை. இவை அனைத்தும் பழனிசாமி கொடுத்த வாக்குறுதிகள் தான். தனது சொந்த மாவட்டத்துக்குக் கூட சொன்னதைச் செய்யாதவர்தான் பழனிசாமி.**

கொடுத்த அத்தனை வாக்குறுதிகளையும் காற்றில் பறக்கவிட்ட ஆட்சிதான் எடப்பாடி பழனிசாமியின் ஆட்சி. இவர்தான் இன்று நல்லாட்சி தந்ததாக உளறிக் கொண்டிருக்கிறார்.

**2011 முதல் 2021 வரை நல்லாட்சி கொடுத்தார்களாம். கொடுத்த வாக்குறுதி எதையும் நிறைவேற்றாதது எப்படி நல்லாட்சியாக இருந்திருக்க முடியும்?**

2016 அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் முக்கியமாகச் சொன்ன அறிவிப்பு, வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு அம்மா ஸ்கூட்டர். வழங்கப்படும் என்பது தான். ஆட்சிக்கு வந்ததும் கிடப்பில் போட்ட அறிவிப்பை 2019 நாடாளுமன்றத் தேர்தலுக்காக அப்போது பா.ஜ.க. கூட்டணியில் இருந்த அ.தி.மு.க. திடீரென பிரதமர் மோடியை வைத்துத் தொடங்கினார்கள். அம்மா ஸ்கூட்டர் மானியம் வெறும் 2.85 பயனாளிகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டிருக்கிறது. பணிக்குச் செல்லும் எல்லா பெண்களுக்கும் வழங்குவதாகச் சொன்னது ஏமாற்று வேலை. 'ஸ்கூட்டர் வாங்க 50 சதவிகிதம் மானியம் வழங்கப்படும்' எனப் பிரச்சாரத்தில் ஜெயலலிதா சொன்னார். ஆனால், ஸ்கூட்டர் விலையில் 50 சதவிகிதமோ அல்லது 25 ஆயிரம் ரூபாய் இதில் எது குறைவோ அந்தத் தொகைதான் மானியமாகக் கொடுத்தார்கள். அதனால் ஸ்கூட்டர் வாங்கியவர்களுக்குப் பாதி தொகை வழங்கப்படவில்லை.

2016ல் அ.தி.மு.க வெளியிட்ட தேர்தல் அறிக்கையில், 'ஆதி திராவிடர் பழங்குடியினர் நல விடுதிகளுக்கு நீராவி கொதிகலன்களும் நீராவி இட்லி குக்கர்களும் வழங்கப்படும்' என்று அறிவித்தார்கள். வெறும் காத்துதான் வந்தது. நரிக்குறவர்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அறிவிப்பு முதல்வர் பழனிசாமி ஆட்சியில் உறங்கிக் கொண்டிருந்தது. 'அம்பேத்கர் கொள்கையை பரப்ப 5 கோடியில் அம்பேத்கர் பவுண்டேஷன் நிறுவப்படும்' என்ற அறிவிப்பு நகரவே இல்லை.

“அரசு மருத்துவமனைகளில் செயற்கை கருத்தரித்தல் மையங்கள் அமைக்க வேண்டும்” என்கிற கோரிக்கை தொடர்ச்சியாக எழுந்த நிலையில் தான், “7 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் 6 தலைமை அரசு மருத்துவமனைகளிலும் கட்டணமில்லா கருத்தரிப்பு மையங்கள் ரூ.10 கோடியில் உருவாக்கப்படும்” என 2017 ஜூனில் அறிவித்தது அ.தி.மு.க. ஆட்சி. 'மகளிர் சிறப்பு மருத்துவர், உடலியல் மருத்துவர், லேப்ராஸ்கோப்பி சிகிச்சை மருத்துவர் எல்லாம் கருத்தரிப்பு மையங்களில் இருப்பார்கள்' எனச் சொன்னார்கள். முதல் கட்டமாகச் சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி, தஞ்சாவூர் ஆகிய 6 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் தொடங்கப்படும் என்றெல்லாம் செய்திகள் வெளியாகின. ஆனால் எதுவும் நடக்கவில்லை.

அமெரிக்க சுதந்திர தேவி சிலை போல ரூ. 100 கோடியில் மதுரையில் தமிழ்த்தாய்க்கு சிலை அமைக்கப்படும் என சட்டமன்ற விதி 110ன் கீழ் அறிவிப்பை 2013 மே 14ம் தேதி வெளியிட்டார் முதல்வர் ஜெயலலிதா. தமிழ்த் தாயை ஏமாற்றிய ஆட்சிதான் அம்மா ஆட்சி.

2011 அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் இருந்தவை பழனிசாமிக்கு நினைவில் இருக்கிறதா?

* **சென்னை முதல் கன்னியாகுமரி வரை கடலோர சாலைத் திட்டம்.**
* **தென் தமிழகத்தில் 'ஏரோ பார்க்'.**
* **ஆன்லைன் வர்த்தகம் தடுக்கப்படும்.**
* **10 ஆடை அலங்காரப் பூங்காக்கள்.**
* **திருப்பூர் சாயக் கழிவுகளைச் சுத்திகரிக்க விஞ்ஞானக் கழிவு அகற்றும் நிலையம்.**
* **58 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இலவச பஸ் பாஸ்.**
* **மின்னணு ஆளுமையின் கீழ் அனைத்துக் காவல் நிலையங்கள்.**
* **விவசாயிகளைப் பங்குதாரர்களாகக் கொண்ட 6 ஆடை அலங்கார சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்.**
* **பள்ளிகளில் தாய்மொழியோடு பிறமொழிகள் பயில சிறப்புப் பயிற்சிகள்.**
* **நீதிமன்றங்களில் தமிழ்மொழி.**
* **தமிழில் படித்தவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பில் முன்னுரிமை.**
* **வனவிலங்குகள் குடியிருப்பு, விவசாய நிலங்களுக்குள் புகுவதைத் தடுக்க நடவடிக்கை.**
* **தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியை இரண்டு மடங்காக்குவோம்.**
* **மொபைல் மின்னணு ஆளுமைத் திட்டம்.**

- இவை எதுவும் நிறைவேற்றப்படவில்லை ஜெயலலிதா ஆட்சியில்!

2016 தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டது நினைவில் இருக்கிறதா?

**அனைத்து ரேஷன் அட்டைதாரர்களுக்கும் செல்போன் விலையின்றி வழங்கப் படும், பெரிய பேருந்து நிலையங்கள், வணிக வளாகங்கள், பூங்காக்கள் போன்ற பொது இடங்களில், இலவச 'வைபை' இணையதள வசதி வழங்கப்படும், அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் அம்மா இரு சக்கர வாகன பழுது பார்க்கும் பயிற்சி மையம் உருவாக்கப்படும்** - இப்படிச் சொன்னது எதையும் செய்யவில்லை. சொன்னது எதையும் செய்யாத பழனிசாமிதான் நல்லாட்சி தந்தாராம்.

7.12.2020 நாளிட்ட 'இந்தியா டுடே' ஏடு வெளியிட்ட ஆய்வு அறிக்கைப்படி ஐந்து ஆண்டுகளின் ( 2015 - 20 ) செயல்பாட்டில் 19 வது இடம் தரப்பட்டது அ.தி.மு.க. ஆட்சிக்கு. 20 மாநிலங்களில் 19 ஆவது இடம். கடைசியில் இருந்து இரண்டாவது இடம் என்று வேண்டுமானால் பழனிசாமி பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

●●




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.11.2024) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் கோயம்புத்தூர், கடலூர், ஈரோடு, கன்னியாகுமரி, புதுக்கோட்டை, தென்காசி, தஞ்சாவூர், தேனி, தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, திருப்பூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் 64 கோடியே 53 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 17 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் பா.பொன்னையா ஆகியோர் கலந்து கொண்டனர்.

### ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

## ரூ.64.53 கோடியில் 17 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி மூலம் திறந்து வைத்தார்!

சென்னை, நவ. 13 -

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் ரூ.64.53 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 17 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங் களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.11.2024) தலை மைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் கோயம்புத்தூர், கடலூர், ஈரோடு, கன்னியாகுமரி, புதுக்கோட்டை, தென் காசி, தஞ்சாவூர், தேனி, தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, திருப்பூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் 64 கோடியே 53 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 17 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தி, மக்களுக்கு தேவையான சேவைகளை வழங்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதே ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முக்கிய நோக்கமாகும். அதன்படி, ஊரகப் பகுதி களில் அடிப்படை வசதிகளான சாலைகள், தெருவிளக்குகள், குடிநீர் வழங்கல், சுகாதாரம் போன்றவற்றை மேம்படுத்தி, உட்கட்டமைப்புகளான பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், ஊரகச் சந்தைகள், உணவு கிடங்கு கள் போன்றவற்றை ஏற்படுத்தி, புதிய ஊரக வளர்ச்சித் திட்டங்களை உரு வாக்கி அதனை திறம்பட தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

ஊராட்சி ஒன்றிய அலுவலகங் களுக்கு வருகை தரும் பொதுமக்களின் வசதிக்காகவும், ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் நல்ல காற்றோட்டமான அலுவலக சூழ லில் பணியாற்ற ஏதுவாகவும், பழைய பழுதடைந்த கட்டடங்களுக்குப் பதிலாக புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்டும் திட்டம் 2008ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையிலான அரசால் முதன்முறையாக அறிமுகப்படுத்தப் பட்டது. அதன்படி, தற்போது வரை 312 புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்ட அனுமதி வழங்கப் பட்டு, அதில் 265 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**புதிதாக கட்டப்பட்டுள்ள 17 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்களை திறந்து வைத்தல்!**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில், ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக் கூறு நிதியின் மூலம் கோயம்புத்தூர் மாவட்டம் - பெரியநாயக்கன்பாளை யம், கடலூர் மாவட்டம் - மங்களூர் மற்றும் பண்ருட்டி, ஈரோடு மாவட்டம் - அம்மாபேட்டை, கன்னியாகுமரி மாவட்டம் - தோவாளை, புதுக்கோட்டை மாவட்டம் - குன்றாண்டார்கோவில், தென்காசி மாவட்டம் - ஆலங்குளம், தஞ்சாவூர் மாவட்டம் - மதுக்கூர் மற்றும் சேதுபாவாசத்திரம், தேனி மாவட்டம் - சின்னமனூர், தூத்துக்குடி மாவட்டம் - கருங்குளம், திருச்சிராப் பள்ளி மாவட்டம் - புள்ளம்பாடி, திருப் பூர் மாவட்டம் - பொங்கலூர், விழுப்புரம் மாவட்டம் - கானை, மேல்மலைய னூர், முகையூர் மற்றும் வானூர் ஆகிய இடங்களில் 64 கோடியே 53 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள 17 ஊராட்சி ஒன்றிய அலு வலகக் கட்ட டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன், தலை மைச் செயலாளர் நா.முருகானந்தம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் பா.பொன்னையா ஆகியோர் கலந்து கொண்டனர்.

### எங்கள் முதல்வர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்

## கூவத்தூரில் ஏலம்விட்டு முதல்வரை தேர்வு செய்யவில்லை!

### எடப்பாடிக்கு அமைச்சர் பி.கே. சேகர்பாபு கடும் பதிலடி!

*சென்னை, நவ.13 -*

*இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர் பாபு பிராட்வே பேருந்து நிலையத்தில் நேற்று முன்தினம் ஆய்வு மேற்கொண்டார்.*

*தொடர்ந்து இராயபுரம் மேம்பாலம் அருகே தற்காலிக மாக அமையவுள்ள பேருந்து நிலையத்திலும் ஆய்வு செய்தார்.*

*பின்னர் செய்தியாளர்களி டம் பேசிய அமைச்சர் பி.கே. சேகர்பாபு, எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனி சாமிக்கு பதிலளிக்கும் போது, எங்கள் முதலமைச்சர் மக்க ளால் ஏகோபித்த ஆதரவுடன் முதல்வராக தேர்ந்தெடுக்கப் பட்டவர். எடப்பாடி போல் கூவத்தூரில் ஏலமிட்டு தேர் வானவர் அல்ல என காட்ட முடன் குறிப்பிட்டார்.*

*இப்பேட்டியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு கூறியதாவது:*

*வடசென்னை வளர்ச்சி திட்டத்தில் செயல்படுத்தப் பட்டு வரும் பணிகள் அனைத்தும் 2025-ம் ஆண்டு டிசம்பருக்குள் முடிக்கப்ப டும். அனைத்து அடிப்படை வசதிகளுடன் ராயபுரம் புதிய பஸ் நிலையம் தற்காலி கமாக விரைவில் செயல்பாட் டுக்கு வரும். ரூ.110 கோடி செலவில் தீவுத்திடலில் ஒரு பிரமாண்ட திட்டத்தை வடி வமைத்து முதல்- அமைச்சர் அந்த திட்டப் பணிகளை தொடங்கி வைத்துள்ளார். அந்த பணிகள் தீவுத்திடலில் நடைபெறுவதால் தற்காலிக மாக ராயபுரம் மேம்பாலம் அருகே உள்ள இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இது வும் வடசென்னையின் மைய பகுதி தான். போக்குவரத்து பயணிகளுக்கு இந்த இடம் உகந்ததாக இருக்கும்.*

*சென்னை வாக்காளர்க ளால் நேரடியாக தேர்ந்தெ டுக்கப்பட்ட மேயர் என்றால் இன்றைய முதல்-அமைச்சர் தான். மழை வெள்ள காலங் களில் வீட்டில் பதுங்கிக் கொண்டு இருப்பதில்லை.*



*மக்களுக்காக மழை வருவ தற்கு முன்பாக களத்தில் தரையில் தன் காலை பதிக் கின்ற முதல்வர் என்றால் நம் முடைய முதல்-அமைச்சர் தான்.*

*கடந்த காலங்களில் திட் டங்கள் என்றால் தங்களுக்கு சுயலாபம் என்னவென்று கணக்கிட்ட காலம் அது. ஆனால் இப்போது கொண்டு வரப்படும் திட்டங்களால் மக்களுக்கு என்ன பயன் என்று கணக்கிட்டு மக்களுக் காக திட்டங்களை கொண்டு வருகிறோம்.*

**மக்கள் முதல்வர்**

*கிட்டத்தட்ட 56 ஆண்டு களுக்கு மேல் பொதுவாழ்வில் இருக்கிறார் நம்முடைய முதல்-அமைச்சர். கொடுஞ் சிறை மிசாவை சந்தித்தார், பல்வேறு அடக்குமுறைகளை எதிர்கொண்டவர், இதுவரை 18 முறைகளுக்கு மேல் சிறை சென்றுள்ளார், ஆனால் ஒரு முறைகூட ஊழல் வழக்குக் காக சிறை சென்றதில்லை. மக்கள் நலனுக்காக மக்களுக் காக களத்தில் நின்று போராடி சிறைக்கு சென்ற வர். தமிழ்நாட்டின் பொக்கி ஷம் நம்முடைய முதல்- அமைச்சர். தீர்க்க தரிசனத்திற்கு ஒரு முதல்வர் உண்டு என் றால் தமிழ்நாடு முதல்- அமைச்சர் தான்.*

*தன்னுடைய ஆட்சியை தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக ஊர்ந்து வந்து முதல்- அமைச் சர் பதவியை அனுபவித்தவர் நம்முடைய முதல்வர் இல்லை. 2021 தேர்தலில் மக் களை சந்தித்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் - அமைச்சர் நம்முடைய முதல்-அமைச்சர்.*

**கூவத்தூரில் ஏலம்**

*கூவத்தூரில் ஏலம் விடப் பட்டு ஏலத்தால் தேர்ந்தெ டுக்கப்பட்ட முதல்- அமைச் சர் எங்களுடைய முதலமை ச்சர் கிடையாது. மேலும் இது போன்ற விமர்சனங்களை முன்வைக்க வந்தால் எந்த விவாதத்திற்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம்.*

*பல்வேறு நாடுகளில் கூட தற்போது தமிழ்நாட்டில் செயல்படுத்தக்கூடிய திட் டங்களை செயல்படுத்தி அந்த நாட்டு மக்களின் நன்மதிப்பை பெற்று வருகிறார் கள். அந்த அளவிற்கு திட்டங் களை தீட்டக்கூடிய முதல்வ ராக நம்முடைய முதல்- அமைச்சர் உள்ளார். மக்கள் நலன் காக்கும் முதல்வராக இருக்கிறார்.*

*இவ்வாறு அமைச்சர் பி.கே. சேகர்பாபு கூறினார்.*




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.11.2024) சென்னை, ஐ.ஐ.டி.எம். (IITM) ஆராய்ச்சி பூங்காவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பெரியார் சமூக நீதி தொழில் வளர் மையத்தினை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் இல.நிர்மல்ராஜ், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெ.இன்னசென்ட் திவ்யா, தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க இயக்கத்தின் இயக்குநர் ரா.அம்பலவாணன் ஐ.ஐ.டி. இயக்குநர் காமகோடி விழிநாதன், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் சிவராஜா ராமநாதன், துபாய் இன்டர்நேசனல் நிதி மையத்தின் இக்னைட் அமைப்பின் அலெக்ஸ் பவன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.